பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 26 உ வெள்ளிக்கிழமை (12-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 22 கதிர்: 219

# கொழும்பு சென்ற தமிழர்கள்

# நூற்றுக்கணக்கில் கைது!

## அரசாங்கம் பெரும் "கெடுபிடி"

கொழும்பு, அக். 12

கடந்த சில தினங்களில் வடக்கிலிருந்து கொழும்புக்குச் சென்ற தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நூற்றுக்கணக்கில் ஸ்ரீலங்காப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

வடக்கிலிருந்து கொழும்பு செல்லும் தமிழர்கள் சந்தேகக் கண்களோடு பார்க்கப்படுவதாகவும் அவர்கள் மீது அரசாங்கம் பெரும் கெடுபிடி நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் சுயேச்சையான செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு வந்து சேர்ந்த தமிழர்கள் தங்கியிருந்த விடுதி ஒன்றை, சுற்றிவளைத்த பொலிஸார், அங்கிருந்த சுமார் இருநூறு பேரைக்கூண்டோடு கைது செய்துகொண்டு சென்றனர்.

இதனைப் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஒப்புக்கொண்டார்.

வடபகுதியில் இருந்து கொழும்பு வந்தடைவோர் தங்கள் பெயர்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முதலில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும்—

ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் தங்கும் வடபகுதித்தமிழர்கள் குறித்து, அவற்றின் நிர்வாகங்கள் பொலிஸுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்க வேண்டும் என்றும்—அரசு கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

வடக்கிலிருந்து கொழும்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொறியில் சிக்கி இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், அக். 12

காட்டில் மிருகங்களுக்கு பொறி வைக்கப்பட்டிருந்த சுட்டுத் துவக்குத் தடத்தில் சிக்கிய இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு பூநகரியிலுள்ள தெளிவரைக் காட்டில் இச்சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்த தெளிவரையைச்சேர்ந்த சி. தங்கராசா (24 வயது) மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஒ 15 3]

## சாவகச்சேரியில் ஹெலியால் பீதி

சாவகச்சேரி, அக். 12

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முற்பகல் சுமார் 10 மணியளவில் ஹெலி ஒன்று சில தடவைகள் வட்டமிட்டது.

ஹெலியைக் கண்ட மக்கள் பெரும் பதற்றமடைந்தனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிச் சந்தை மீது ஹெலி நடத்திய தாக்குதலில் 12 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ)

## பண்ணையில் கண்ணிவெடி; 6 பொதுமக்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், அக். 12

யாழ்ப்பாணம், பண்ணைத் தாம்போதிப் பகுதியில் சிரமதான அடிப்படையில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த புங்குடுதீவு வாசிகள் ஆறுபேர் நேற்று முன்தினம் (புதன்) இரவு கண்ணிவெடியில் சிக்கி படுகாயமடைந்தனர்.

கண்ணிவெடியில் சிக்கிய வயோதிபர் ஒருவர் காலை இழந்துவிட்டார்.

இராணுவநடவடிக்கை காரணமாக நாசமாகியுள்ள பண்ணைத் தாம்போதியைத் திருத்தும் வேலைகள் தீவுப் பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன;

சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இப்பணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சார்த்த மின் இணைப்பு சுன்னாகத்திற்கு கிடைத்தது

யாழ்ப்பாணம், அக். 12

கிளிநொச்சியிலிருந்து 32 கே.வி. மின் இணைப்பூடாக சுன்னாகம் மின் நிலையப் பகுதிவரை மின்சாரத்தைப் பெறும் பரீட்சார்த்த முயற்சி வெற்றியடைந்ததாக அறியவருகிறது.

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்பட்ட மின்சாரம், நேற்று கோப்பாய் ஊடாக சுன்னாகம் வரை பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டதாக அறியவந்தது.

டிரான்ஸ்போமர்களிலிருந்து திருட்டுப் போன "ஒயில்" மீண்டும் நிரப்பப்படும் பட்சத்தில குடாநாட்டு மக்களுக்கு உடனடியாக சுழற்சி முறை மின்சாரத்தை ஓர் ஒழுங்குமுறையில் வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. [உ-3-9]

### காமன்வெல்த் மூலம்

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு; ஆஸ்திரேலியா முன்முயற்சி!

மெல்போர்ன், அக். 12

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் காமன்வெல்த் முன் முயற்சி எடுப்பதற்கு, ஆஸ்திரேலியா தூண்டுதல் அளிக்க உள்ளது.

இது சம்பந்தமான திட்டம் ஒன்றை ஆஸ்திரேலிய அரசாங்கம் தயாரித்துள்ளதாக அந்நாட்டு வானொலி (ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அறிவித்தது.

இலங்கை இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களையும் இணங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மண்கும்பானில் ஹெலி சூடு; பெண் ஒருவர் படுகாயம்

மண்கும்பான் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமுற்ற மகாலட்சுமி (வயது 38) என்ற இந்தப் பெண் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹெலித் தாக்குதலினால் மண்கும்பானிலிருந்த சில வீடுகளும் சேதமடைந்தன. (உ-3)

## இராணுவ முகாம் மீது ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 12

திருகோணமலை மாவட்டம் இறக்கக்கண்டி இராணுவ முகாம் மீது கடந்த செவ்வாய்க் கிழமை விடுதலைப் புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சேத விவரங்கள் குறித்து தகவல்ஏதும்கிடைக்கவில்லை. [ஒ]

## மண்டைதீவில் கைதானோர் குறித்து தகவல்ஏதும் இல்லை

மண்டைதீவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 23 இளைஞர்கள் குறித்து எதுவித தகவலும் இல்லை என்று அவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இவர்கள் பற்றிய விவரத்தை அறிந்து தகவல் தருமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதுவரை அவர்கள் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ 3)

## அந்த ஏழு நாள் சிசு அநாதையாகி விட்டது!

யாழ்ப்பாணம், அக் 12

நேற்று முன்தினம் (புதன்) கோண்டாவில் கிழக்கில் நடந்த பொம்மர் குண்டு வீச்சில் தாயை இழந்த அந்த ஏழு நாள் சிசு அநாதையாகி விட்டது.

இச்சம்பவத்தில் கால் துண்டிக்கப்பட்டு, மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்தச் சிசுவின் தந்தையும் நேற்று முன்தினம் (புதன்) இரவு 11 மணியளவில் மரணமாகிவிட்டார்.

இ.போ.ச. மெக்கானிக்கான இராசரத்தினம் வரதராசா (36 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

இறந்தவரின் மூத்த மகனான 3 வயதுப் பச்சிளம் பாலகனும் சம்பவத்தின் போது பலியாகி இருந்தார் என்பது தெரிந்ததே.

தாயையும், தந்தையையும், சகோதரனையும் இழந்து உலகில் தனித்து விடப்பட்ட அந்த அப்பாவிக் குழந்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 12

கடந்த செவ்வாய்க்கிழமையன்று திருகோணமலை மாவட்டம் வேப்பங்குளம் 10 ஆம் கட்டைப் பகுதியில் இராணுவத்தினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் [illegible] புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த [illegible] போராளி வீரமரணமடைந்தார். [உ]

## 12 சிப்பாய்களின் சடலங்கள் குறித்து ரஞ்சன் தகவல்

கொழும்பு. அக். 12

சிப்பாய்கள் 12பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அனுப்பி வைத்துள்ளார்கள் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த 12 சடலங்களையும் அடுத்த நாள் (புதன்) காலை ஸ்ரீ லங்கா கடற்படையினர் கப்பலில் இருந்து பொறுப்பேற்றுக்கொண்டனர் என்பது தெரிந்ததே. [ஓ-எ]

### விபத்து மரணம்

நேற்று முன்தினம் தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

மரணமானவர் வீரவேங்கை தயாளன் [துரைசிங்கம் ரஜீவன்- தையிட்டி] என்பவராவார். [அ-9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மல்லிகை வெள்ளிவிழா மலர்

உயர் கல்வி மாணவர்களுக்குப் பயன்படும் தகவல்களை, இலக்கியச் சுவைஞர்களுக்கு ரஸமான கட்டுரைகளை உள்ளடக்கமாகக் கொண்டது. பாதுகாக்கப்பட வேண்டியது. பரிசளிக்க உகந்தது. மல்லிகை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (14422)

### "இலவசம் நாவல்கள்"

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ருபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்; திருக்கணிதம், சாவகச்சேரி.; ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (14386)

### கோழித்தீன்

கோழித்தீன் வஸ்களன் கலந்து கொடுக்கப்படும். கோழித்தீன் விற்கப்படும் மூலதாரப் பொருட்கள் அரைத்துக் கொடுக்கப்படும். மீன்பிடி வலைக்கு பயன்படுத்தப்படும் சண்டி பட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம் சிவா மில்ஸ் அன் இண்டஸ்றீஸ் 46/1 பிறவுண் வீதி 4 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் (14402)

### இடமாற்றம்

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்திருந்த முறிவு, நோவு வைத்திய நிலையம் தற்போது சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கையில், இராமநாதன் இல்லத்தில் அமைந்துள்ளது. காலை 9 00 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வைத்தியம் நடைபெறுகின்றதென்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். பூ. திருஞானசம்பந்தர வசாவிளான். [14391]

### பேபி நீட்ஸ்

59 நவீன சந்தையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது கே. கே. எஸ் வீதி, தாவடி (சந்திக்கு அருகாமையில்) தற்காலிகமாக இயங்கி வருகின்றது. என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [14405]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில் (சி-5219)

### ரதி வோச் வேக்ஸ்

(Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக தந்த மணிக்கூடு வகைகளை இல, 12. பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும். திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (யாழ் நகரில்மணிக்கூடுகள்திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14401)

## பட்டப் படிப்புகள் கல்லூரி
### அறிவித்தல்

இதுவரை பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணபிக்கத் தவறிய பின்வரும் கல்வியாண்டிற்குரிய மாணவர்கள் 14-10-1990 ஞாயிறு காலை 9 மணிக்கு தவறாது வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வரும் பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பதிவேட்டையும் அல்லது பதிவு இலக்கத்தையும் கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1. கலைமாணி B A 1989 டிசம்பர் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்.
2. கலை முகம் தேர்வு 1990 ஏப்ரல் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்
3. கலை முதற்தேர்வு 1991 ஏப்பிரல் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்
4. விஞ்ஞானமாணி B sc 1989 டிசம்பர் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்
5. விஞ்ஞான முகற் தேர்வு G. S Q 1990 ஏப்ரல் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்
6. விஞ்ஞான முகற்தேர்வு G S Q 1991 ஏப்ரல் பரீட்சைக்கு தோற்ற வேண்டியோர்.

இ. சத்தீஸ்வரன்,
இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (13889)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 17 - 08 - 1975 தாயக மீட்பில் 13 - 09 - 90

### வீரவேங்கை குருபரன்
### சங்கரலிங்கம் யோகசேகரன்
(கரன்)

கோட்டைக்குள் புகுந்துவெற்றிகொண்ட
பதின்மூவரில் நீயும் ஒரு புலியாக...
உள்ளம் உறைக்கின்றது
கண் கலங்குகின்றது - ஆனால்
உன் கனவை நனவாகக
ஊழித்தாண்டவம் இங்கு நடந்தேனும்
புரட்சிகீதமொன்று புயலுடன் மேலும்
மலரும்... மலரும்... தமிழீழம்
சுதந்திர மண்ணில்
கோட்டை மதிற்கல் கொண்டு
புதைகுழி அமைப்போம் உனக்கு
கடமையை ஒப்படைத்து விட்டு
கண்ணுறங்கு குருபரா!
சுதந்திர விடியலின் பொற்கதிரால்
குயிலெழுப்பும் வரை வீரனே!
நிம்மதியாய் உறங்கு நிரந்தரமாய் அல்ல

உமதுபிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [14421]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
### இராஜநாயகம் இராஜாராஜன்
(ராஜ்)

அன்னை மடியில்: 05 - 12 - 1970
அரக்கன் அழிப்பு: 12 10 - 1987



பதினேழாவது வயது பூர்த்தியாகுமுன் எங்கு சென்றீர் மகனே! என் அருமை மகனே ராஜ, வருடங்கள் ஆயிரம் ஆனாலும் உமது தாயின் உயிர் பிரியும்வரை உமது அன்பு, பண்பு, பாசம் நிறைந்த அன்பின் திரு உருவம் என்றும் மறக்க முடியாது மகனே ராஜா. மகனே ராஜா, எந்நாளும் உமது தாயின் கண்ணீர்தான் உமக்கு அர்ச்சனைப் பூக்கள் ஆகிவிட்டன மகனே! கண்ணை இழந்து தவிக்கிறோம் மகனே! ஊன்றுகோல் நீரென நம்பியிருந்தோம் மகனே! இன்று பார்வை அற்ற பறவையாய் ஆனோம் மகனே! பாவிகள் அடித்த ஷெல் வீடுதேடி வந்து உமது உயிரை இரக்கமின்றிக் குடித்ததோ மகனே. ஆண்டவனும் பார்த்துக்கொண்டுதானிருந்தானோ? மகனே எங்கு சென்றாலும் சொல்லாமல் செல்லமாட்டீர் எங்கு சென்றீர் மகனே. என்னுயிர் உம்மை எங்கு எல்லாம் தேடுவது மகனே! ராஜா எப்பிறப்பில் இனி அம்மா என்ற உங்கள் மழலைச் சொல்லைக் கேட்பேன் மகனே. உங்கள் ஆத்மா சாந்தியடைந்து. மீண்டும் எங்கள் இல்லம் வாரும், நீண்ட ஆயுளுடன். சாந்தி! சாந்தி! சாந்தி!!!

உமது பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அண்ணா, உறவினர், நண்பர்கள்.
ராஜராஜன் இல்லம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
[வரைவுள்ளது]

## பதவி வெற்றிடம்

பதவி;
### பொது முகாமையாளர் - 101/4

மேற்படி பதவிக்கு ஆண்பாலரிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

**விண்ணப்ப முடிவுத் திகதி: 24 - 10 - 90**

1. சம்பள அளவுத் திட்டம்: 1755 — 2805 / 75 x 6 — 100 x 6
2. வயதெல்லை: 30 — 45 வரை
3. பிணைப்பணம்: உரொக்கம் ரூபா 10 000/- ஆதனப் பிணை ரூபா 25 000/-
4. **கல்வி மற்றும் தகைமைகள்:**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 5ஆம் சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 6 ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இவ் எட்டு வருட கால அனுபவத்தில் 02 வருடங்களுக்கு குறையாமல் சிரேட்ட முகாமை மட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுச்சங்க ஊழியர்(உயர்தரம்)சான்றிதழ் க.பொ.த.(உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவம். இப்பத்து வருகால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேட்ட முகாமை மட்டப் பதவியில் 02 வருடகால அனுபவம்.

**குறிப்பு:-**

1. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து அனுப்பப்படல் வேண்டும்.
2. கல்விச் சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும், வசிப்பிடத்தகமை பிறப்புச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும், விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
3. கால் நடை வளர்ப்பு, கால்நடை உணவு தயாரித்தல் போன்றனவற்றில் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படும்
4. விண்ணப்பப்படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

தலைவர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாசலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
08 - 10 - 90. (சி-5241)

## மரண அறிவித்தல்

### செல்வன் சச்சிதானந்தன் மயூரன்

செல்வன் ச,மயூரன் 29-08-1990 அன்று லண்டனில் அகால மரணமடைந்தார்.

இவர் சச்சிதானந்தன் [லண்டன்], விஜயகுமாரி [லண்டன் - முன்னாள் நவீன்ட் பாடசாலை ஆசிரியை] அவர்களின் அன்பு மகனும், பிரணவனின் அண்ணாவும், கனகசபை [ஓய்வுபெற்ற இ. போ. ச. பரிசோதகர், கோண்டாவில] அவர்களின் அன்புப் பேரனும், திரு. திருமதி அம்பிகைபாலன் கல்யாணி [கிளிநொச்சி], சிவபாலன் [சவூதி] ஆகியோரின் மருமகனும், சந்திரகுமாரி [நோர்வே]. திரு. திருமதி செல்வரட்ணம் ஜெயக்குமாரி ஆகியோரின் பெறாமகனும், சின்னம்மாவின் பேரனும், பிரியதர்சினி, பிரியதாரணி, மயூறி ஆகியோரின் மச்சானும், மாதுலனின் அண்ணாவும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் லண்டனில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்.
திரு. ச. கனகசபை
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (14420)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### இந்தியாவின் உட்பக்கம்

இந்தியப் பிரதமர் வி. பி. சிங். தலைமையிலான அரசாங்கத்துக்கு மீண்டும் ஒரு கண்டம் உண்டாகி உள்ளது

மண்டல்கமிஷன் சிபார்சை ஏற்றுக்கொண்டு, வேலை வாய்ப்பில் ஏற்சனவே நடைமுறையில் இருந்த இருபத்திரெண்டரைச் சதவீதத்துடன், மேலும் இருபத்தேழரைச் சத வீதத்தைச் சேர்த்து மொத்தம் ஐம்பது சதவீதத்தைத் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பினருக்கு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது

அதனை எதிர்த்து நாட்டின் பலபகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள், தீக்குளிப்புகள், நஞ்சருந்தி தற்கொலை செய்தல், ரயிலுக்குத் தீ வைத்தல் போன்ற என் செயல்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்தியாவின் சனத்தொகையில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களே எண்ணிக்கையில் அதிகமானவர்கள் ஆனால் நாடு சுதந்திரமடைந்து 43 வருடங்கள் சென்ற போதிலும், அவர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் போதிய வசதிகள் செய்யப்படவில்லை. அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படவில்லை.

நான்கு தசாப்தங்களில் இந்தியா பல மடங்கு சுயபலமும், முன்னேற்றமும் கண்டுவிட்ட போதிலும், அங்கு எல்லா மக்களுக்கும் சமூக - பொருளாதாரத் திட்டங்களில் சம வாய்ப்பும் சம உரிமையும், வசதிகளும் வழங்கப்படவில்லை உண்மையான சனநாயக சமத்துவம் உருவாகவில்லை. பெரும்பான்மையினரான தாழ்ந்த வகுப்பார்களுக்குப் போதிய உரிமைகள் வழங்காது, சிறுபான்மையினரான உயர் சாதியினர் தாம் அதிக உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கின்றனர்.

வெளியே தெரியாமல் உள்ளுக்குள் இழைக்கப்படும் இந்த அநீதி, இந்தியா இன்னமும் ஒரு வைதீக, பிற்போக்கு நாடு என்பதையே வெளிச்சப்படுத்துகிறது தென்கிழக்கு ஆசியாவின் சட்டாம்பிள்ளையாகவும், பலவீன மானவர்களின் இரட்சகராகவும் நடந்து கொள்ள விரும்பும் இந்தியாவிடம் வைதீகமும், பிற்போக்குத்தனமும் உள்ளே பொறிந்திருப்பது அதன் மிகப் பெரிய சூத்தையாகும்.

இந்தச் சூத்தையைப் போக்க எடுக்கப்படும் ஒரு முயற்சியே மண்டல் கமிஷன் அறிக்கை அமுல். மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் செய்வதாக ஆட்சியில் உள்ள ஜனதாதள் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது. அதனால் புதிய கொள்கையை அமுல் செய்வதில் பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வி. பி. சிங். அரசு அறிவித்துவிட்டது.

இதுவரை,அளவுக்கு அதிகமான சலுகைகளை அனுபவித்து ருசி கண்டவர்களுக்கு புதிய கொள்கையை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை; சமித்துக்கொள்ள முடியவில்லை. சமூகத்தில் தம்மிடம் நிறைந்திருந்த செல்வாக்கும்,அதிகாரமும் காலப்போக்கில் பறிபோய்விடுமே என்ற கவலை அவர்களுக்கு.

புதிய திட்டத்துக்கு உள்ள எதிர்ப்பை அரசு உறுதியுடன் சமாளித்து நிலைநிற்குமா என்பது கேள்விக்குரியதே!

### புங்குடுதீவில் கௌரிநோன்பு

புங்குடுதீவு, அக். 12

புங்குடுதீவு மேற்கு கிராஞ்சியம்பதி சிவன்கோவிலில் கௌரிவிரத இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது

இந்த விரதத்தின் இருபத்தோராம் நாள் இலட்சார்ச்சனை பூர்த்தியும் கௌரி காப்பு அணிவித்தலும் இடம்பெறும். சிவாகம சிரோமணி சிவஸ்ரீ ஸ்ரீனிவாசநாகேந்திரக் குருக்கள் இலட்சார்ச்சனையைத் தொடங்கிநடத்தி வருகின்றார். (இ)

### பளை அஞ்சல் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், அக். 12

ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகவிநியோக எல்லைக்கு உட்பட்ட கடிதங்கள் யாவும் பளை அஞ்சல் அலுவலகத்தில வைத்தே விநியோகிக்கப்படுகின்றன.

ராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஆனையிறவு உப அஞ்சல் அலுவலகம் கடந்த ஜூலை 19 ஆம் திகதி முதல் இயங்காத நிலையில் உள்ளது (இ)

### வீடு சேதம்

மல்லாகம், அக். 12

கடந்த திங்கட்கிழமை கடலில் இருந்து மேற் கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலின் போது கருகம்பானையில் வீடு ஒன்று சேதம் அடைந்தது.

## கொழும்பிலிருந்து யாழ். வருவோர் எண்ணிக்கை தினமும் அதிகரிப்பு

### இங்கிருந்து சென்ற பலர் வவுனியாவுடன் திரும்பினர்

யாழ்ப்பாணம், அக். 12

கடந்த ஒரு சில தினங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் தென் பகுதியிலிருந்து வடபகுதி நோக்கி வரத் தொடங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் போக்குவரத்து விதிகள் தளர்த்தப்பட்டதை அடுத்தும் வடபகுதியில் தாக்குதல்கள் ஓரளவுகுறைந்திருந்ததை அறிந்துமே தென்பகுதியில் இருந்து ஏராளமானவர்கள் வடபகுதி நோக்கி வரத் தொடங்கியுள்ளனர்

நேற்று மினிபஸ்கள், டிரக்டர்கள், சைக்கிள்கள் மூலம் பெரும் எண்ணிக்கையானோர் யாழ் நகரைநோக்கி வந்தனர்.

அதேசமயம் கொழும்புசெல்லும் பொருட்டு வவுனியா சென்றிருந்த யாழ். மக்களில் பல நூற்றுக் கணக்கானோர் கடந்த மூன்று நாட்களில் இங்கு திரும்பி விட்டனர்,

வடக்கிலிருந்துபோவோரை வவுனியா நகருக்குள் அனுமதிக்கும் தடை முகாம் பகுதியில் தர்பார் நடத்திய இராணுவச் சிப்பாய் ஒருவரைத் தமிழ் இளைஞர் ஒருவர் தாக்கினார் என்றும்—

அதைத் தொடர்ந்து சிப்பாய்கள் ஆவேசமுற்றதால் பதற்ற நிலை நிலவியதாகவும்—

அதனைத் தொடர்ந்து குடும்பம் குட்டியாக கொழும்பு செல்வதற்குச் சென்ற பலரும் அச்சம் காரணமாக யாழ்ப்பாணம்திரும்பிவிட்டனர் என்றும்— அறியவந்தது.

இதேவேளை இங்கிருந்து சென்று வவுனியா நகருக்கு வெளியே புறநகரப் பகுதியில் தங்கியிருந்தவர்களில்செவ்வாயன்று ஆயிரம் பேர் மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர் எனவும் தெரியவந்தது. (அ 5 9)

### வங்கிகளின் சர்வதேசபிரிவு இயங்கமுடியாத நிலை

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும், சர்வதேசப் பிரிவுகள் இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை.

வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் அடிக்கடி வேறுபடுவதால், அவற்றை உடனுக்குடன் கொழும்பிலிருந்து அறிந்து கொள்ள முடியாத நிலை நிலவுகிறது

மேலும் கொழும்புடனான போக்குவரத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு உள்ளன

இந்தக் காரணங்களாலேயே வங்கிகளின் சர்வதேசப் பிரிவு இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிலைமை சீராகும் பட்சத்தில் இன்னும் ஒரு சில வாரங்களில் சர்வதேசப் பிரிவு இயங்கக்கூடிய நிலை தோன்றலாம் என வங்கி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (இ-5 6)

### ஊர்காவற்றுறையிலிருந்து புங்குடுதீவுக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், அக். 12

ஊர்காவற்றுறைப் பகுதியில் படையினர் தற்போது நிலைகொண்டுள்ள இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த 800 பேர் புங்குடுதீவில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை, சுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ளனர்.

அங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களே இவர்களை பராமரித்து வருகின்றன. (இ-6)

### அவர் நினைத்தது ஒன்று ஆனால் நடந்தது வேறு!

அச்சுவேலி, அக். 12

ஒருவர் ஒன்றை நினைத்து திருடில் ஈடுபட அது எதிர்மாறாக அமைந்து விட்டது.

பித்தளையினால் செய்யப்பட்ட தாலிக்கொடியை தங்கத்திலான தாலிக்கொடி என்று எண்ணித் திருடி வந்தவர் அச்சுவேலி - வல்லைவைச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவிடம் சிக்கினார்.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்றது.

கைது செய்யப்பட்டவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தங்கத்திலான தாலிக்கொடி என்று நினைத்தே தமது மனைவிக்கு அன்பளிப்புச் செய்ய திருடி வந்ததாக விசாரணையின் போது அவர் தெரிவித்தாராம். (இ-11)

### சாவகச்சேரியில் துக்கதினம்

தென்மராட்சி, அக் 12

கடந்த செவ்வாய் சாவகச்சேரி சந்தைமீது நடத்தப்பட்ட ஹெலித் தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் புதன் சாவகச்சேரிப் பகுதி எங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. (ஒ 117)

### காசோலை செல்லுபடி

யாழ்ப்பாணம், அக் 12

யாழ் செயலகத்தால் கடந்த ஜூன் மாதம் முதல் வழங்கப்பட்டு பாவனைக்கு உரியகாலம் முடிவடைந்த காசோலைகள் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிவரை செல்லுபடியாகும் என செயலகக் கணக்காளர் அறிவித்துள்ளார். (இ-3)

### செஞ்சிலுவை சங்க வாகனத்தில் சென்ற தமிழரும் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், அக். 12

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் இருந்து செஞ்சிலுவைச்சங்க ஏற்பாட்டில் விசேட அதிரடிப் படையின் அனுமதியுடன் செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில புறப்பட்டுச் சென்ற 8 தமிழ் இளைஞர்கள் சம்மாந்துறையில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் வழிமறிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவர் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டனர்,

ஏனைய ஆறு இளைஞர்களும் சம்மாந்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

### இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கும் நிவாரணம்

யாழ்ப்பாணம், அக். 12

இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கும் உலர்உணவு நிவாரணம் வழங்க உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக விவரங்கள் திரட்டப்படுகின்றன.

அதேபோன்று இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களின் விவரங்களும் தற்போது சேகரிக்கப்படுகின்றன.

இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க அனுமதி கிடைத்துள்ளதாகவும், இடம்பெயர்ந்த ஓய்வூதியக்காரர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். (இ-3)

### பரா வெளிச்சம்

மல்லாகம், அக்.12

கடந்த செவ்வாய் இரவு 7 30 மணி அளவில் காங்கேசன்துறை ஹாபர் வியூ முகாமில் இருந்து பரா வெளிச்சம் பாய்ச்சப்பட்டது.

### ரயில் பயணிகள் 47 பேர் கருகி மரணம்

ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட் தீவிரவாதிகள் பயணிகளுடன் ரயில் பெட்டி ஒன்றை எரித்தனர்.

அப்பெட்டியில் இருந்த 47 பேர் உடல் கருகி மாண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-எ)

## தரைப்போக்குவரத்து பாதிப்பால் கூ. சங்கங்கள் வெறுமை நிலை

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களில் அனேகமானவை உணவுப் பொருள்கள் இன்றி வெறுமையாகக் காணப்படுகின்றன.

தனியாரிடம் பொருள்கள் தாராளமாக இருக்கின்றன. இதற்குக் காரணமான கொழும்பு - யாழ்ப்பாணம் தரைப் போக்குவரத்தை சீராக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை மேற்கண்ட கோரிக்கையை யாழ். அரச அதிபரிடம் விடுத்துள்ளது.

கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த காலங்கள் போன்று ப. நோ. கூ. சங்கங்கள் கொழும்பு சென்று லொறிகள் மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து விற்பனை செய்ய அனுமதி பெற்றுத் தருமாறு ஜூலை மாதம் 25 ஆம் திகதி தங்களிடம் கேட்டிருந்தோம்.

ஆனால் இதுவரை இது சம்பந்தமாக அனுமதி கிடைக்காததால், கொழும்பு-யாழ்ப்பாணம் தரைப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளோம்.

உடனடியாகத் தரைப்போக்குவரத்து மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் —

இப்படிக் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, வெளி மாவட்டங்களில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்து வருவது தொடர்பான கூட்டம் ஒன்றை இன்று காலை 10 மணிக்கு யாழ், மாவட்ட கூட்டுறவுச் சபை கூட்டியுள்ளது. ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசனில் மோதல்!

யாழ்ப்பாணம், அக். 12

நேற்று முன்தினம் நண்பகல் 12 30 மணியளவில் காங்கேசன்துறை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேற முற்பட்டனர்.

அவர்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அந்த மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை இந்திரன் [கனகரத்தினம் இந்திரவேல்-தெல்லிப்பழை] வீரமரணமடைந்தார். [அ-9]

# பரந்தனில் மிதிவெடி பீதி! வீடு திரும்ப மக்கள் அச்சம்!!

கிளிநொச்சி, அக். 13

பரந்தன் சந்திப் பகுதி தொடர்ந்து ஸ்தம்பித நிலையிலேயே இருந்து வருகிறது.

இராணுவம் முன்னர் முகாம் அமைத்திருந்த இந்தப் பகுதி தற்போதும் மக்கள் நடமாட்டம் இன்றி காணப்படுகின்றது.

மிதிவெடிப் பயம் காரணமாக இந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், வீடுகள் ஆகியவற்றுக்கு செல்ல பொதுமக்கள் அஞ்சுகிறார்கள்.

தற்போதும் கால் நடைகள் மிதிவெடியில் சிக்கி கால்களை இழக்கின்றன. (இ-76)

## அம்பாறை மாவட்டத்தில்

# காணாமற் போன ஊழியர் விவரம் திரட்டப்படுகிறது

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜூன் 11 ஆம் திகதிக்குப்பின்னர் காணாமல் போன -கைது செய்யப்பட்ட -அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமான நடவடிக்கைகளை "அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற ஊழியர் நலன்புரி ஒன்றியம்" மேற்கொண்டு வருகிறது.

காணாமல் போனோர் அல்லது கைது செய்யப்பட்டோர் சம்பந்தமான சகல விவரங்களையும் "என். மணிவாசகன், செயலாளர், அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற ஊழியர் நலன்புரி ஒன்றியம், 'சிவவாசா' அக்கரைப்பற்று -8" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா இராசையா

[கந்தரோடை]

கந்தரோடையை வசிப்பிடமாகக் கொண்ட செல்லப்பா இராசையா அவர்கள் 10-10-1990 (நேற்று) காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும், S. R. சபாரத்தினம், S R. கனகரத்தினம் (S R. Transport Contractor - Clay), S R, பாலசிங்கம் (அகில இலங்கை சமாதான நீதவான்), S R மயில்வாகனம் (வர்த்தகர், கொழும்பு), S R பத்மநாதன் (மலர்விழி ஸ்ரோர்ஸ், அளவெட்டி), திருமதி நாகேஸ்வரி ஆனந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சரஸ்வதி சபாரத்தினம், திருமதி சந்தானலட்சுமி கனகரத்தினம், திருமதி சந்திரப்பிரபா பாலசிங்கம், திருமதி சறோஜினிதேவி மயில்வாகனம், திருமதி பாலயோகினி பத்மநாதன், திரு. க. ஆனந்தராஜா (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-10 1990 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
கந்தரோடை. (13892) க. ஆனந்தராஜா

## சிந்தாமணி பார்பதிப்பிள்ளை

மண்டைதீவு, சிந்தாமணி பார்பதிப்பிள்ளை நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் சிந்தாமணியின் அன்பு மனைவியும், சிவசோதி, இராசகுலநாயகி, யோகநாயகி [குவைத்], காலம் சென்ற நடேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்த நடராசா, கோபாலபிள்ளை ஆகியோரின் மாமியாரும், வசந்தரூபன், தயாளன், ஜெயந்தன் (சுவிஸ்), சுதர்சன், முகுந்தன், திலீபன், துயாதா, துஷ்யந்தன், கவிதா ஆகியோரின் அன்புப்பேத்தியும், கஜீபனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10-00 மணிக்கு 179/4, கோவில் வீதி, நல்லூரில் இருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்;

தகவல்;
ஸ்ரீ முருகன் மில், மண்டைதீவு. (13895) சி. ஆனந்தநடராசா, (மருமகன்)

# சிப்பாய் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக் 12

மட்டக்களப்பு, சித்தாண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்டிருந்த பொறி வெடியில் சிக்கி சிப்பாய் ஒருவர் காலை இழந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. [ஒ]

# கரை ஒதுங்கிய சடலம்

நெடுந்தீவு, அக். 12

உருக்குலைந்த நிலையில் நெடுந்தீவு கிழக்கு கடற்கரையில் கரை ஒதுங்கிய சடலம் ஒன்று அடையாளம் காண முடியாத நிலையில் பொதுமக்களால் அடக்கம் செய்யப்பட்டது. (இ-111)

# ஷெல்லினால் சிறுவன் காயம்

மல்லாகம், அக். 12

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் மாவிட்டபுரம் அரசடியில் ஆறு வயதுச் சிறுவன் ஒருவர் காயமடைந்தார். புதன் மாலை இச்சம்பவம் நடந்தது.

காயம் அடைந்தவர் ரு. நிதன்சன். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் சின்னத்தங்கம் (60 வயது) என்ற பெண்ணும் சிறு காயத்துக்கு உள்ளானார். [இ-ரி]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் நடராசா சுரேஷ்குமார்

[கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்]

அன்னையின் மடியில்: 22- 03 - 1969

அந்நியர் அழிப்பில்: 12- 10- 1987

அன்புத் தெய்வமே! இல்ல ஒளி விளக்காய், அன்பர்க்கு அன்பனாய், உற்றார், உறவினர்க்கு வழிபனாய்த் திகழ்ந்த பண்பாளா! உனை ஆசையாய் வளர்த்து வரும் வேளைதனில், பொங்கி வருகையிலே பானை உடைந்தது போலாகியதே. உன் நினைவால் ஏங்கித் தவிக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மீளாத் துயரில் மூழ்கும்:
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கையர்,
தம்பியர், அப்பு,
[illegible]
(14351)

# ஆகஸ்ட் மாத ஓய்வூதியம்; காசோலைகள் வங்கிகளுக்கு

## செப்டம்பர் வவுச்சர் இன்னுமில்லை

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஆகஸ்ட் மாதக் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாக யாழ். செயலக ஓய்வூதியக் கிளை கணக்காளர் தெரிவித்தார்.

அனேகமாக இன்னும் ஓரிரு நாட்களில் இந்த வேலைகள் யாவும் பூர்த்தியாகி விடும் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை—

செப்டம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் இன்னமும் கொழும்பிலிருந்து வந்து சேரவில்லை. எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5 6)

# விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 12

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண வேலைகளை சீராக நடைமுறைப்படுத்தும் வழிவகைகளை ஆராயும் இன்றைய விசேட கூட்டத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும் கலந்துகொள்கிறார்கள். செயலக நிவாரணவேலைகள் சம்பந்தமான கூட்டம் ஒன்றில் ப. நோ. கூ. சங்கத் தலைவர்களும் முகாமையாளர்களும் முதல் முறையாகக் கலந்து கொள்கிறார்கள். (அ-3)

# பாடசாலை அபி. சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 12

யாழ். மாவட்ட பாடசாலைகள் அபிவிருத்தி சங்க சம்மேளனத்தின் விசேஷ கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை 10 மணிக்கு நல்லூர் ஸ்தான பாடசாலையில் நடைபெறும்.

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னோடியாக மேற்கொள்ளப் படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இங்கு ஆராயப்படும் (இ-3)

## அந்த ஏழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் நிலை பரிதாபத்திற்குரியது.

ஏதுமறியாத இந்தச் சிசு தற்பொழுது தந்தையின் சகோதரனின் வீட்டில் கை, கால்களை அசைத்துச் சிரித்தும் சிலவேளைகளில் வீறிட்டு அழுது கொண்டும் இருக்கிறது! [ஒ 3-15-143]

## பண்ணையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் ஈடுபட்டிருந்தனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (வயது 60) என்பவரே இச்சம்பவத்தில் தமது காலை இழந்தவர் ஆவார்.

புங்குடுதீவைச் சேர்ந்த தம்பு இராமச்சந்திரன் (வயது 46), மார்க்கண்டு நாகேந்திரன் (வயது 35), கணேசு தம்பிராசா (வயது 35), குமாரசாமி சத்தியசீலன் (வயது 40), எஸ் சண்முகலிங்கம் (வயது 50) ஆகியோரே படுகாயமடைந்த ஏனைய ஐவரும் ஆவர். (ஒ-15-3)

## இனப்பிரச்சினைக்கு...

கச் செய்யும் விதத்தில், தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கே காமன்வெல்த் நாடுகள் பிரதான கூட்டமைப்பாக அமைந்து செயற்பட வேண்டும் - என்று ஆஸ்திரேலிய அரசாங்கம் இது சம்பந்தமாகத் தயாரித்துள்ள உத்தேச திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப் பிரச்சினையை காமன்வெல்த் அமைப்பு மூலம் தீர்க்கவேண்டும் என்ற யோசனையை ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி செனட்டர் றொபேட் ஹில் என்பவரே முதன் முதலில் தெரிவித்திருந்தார்.

அவரது யோசனையை ஏற்றுக்கொண்டு ஆஸ்திரேலிய அரசாங்கம் காமன்வெல்த் செயலகத்துக்குச் சமர்ப்பிக்கவென ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது.

## கொழும்பு---

வருவோர் குறித்து அரசு அறிவித்த தீவிர கட்டுப்பாடுகள் வருமாறு:—

★ வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து கொழும்பு வரும் தமிழ் அகதிகளுக்கு என்று கொழும்பில் ஏற்கனவே இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவை ஏற்படுமானால் மூன்றாவது முகாம் இரத்மலானையில் திறக்கப்படும்.

★ உறவினர்களுடன் தங்க விரும்பும் அகதிகள் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த பின்னர் உறவினர்களுடன் தங்கலாம். ஆனால் அந்த அகதிகளின் செயல்களுக்கான பொறுப்புகளை அந்த உறவினர்களே பொறுப்பு ஏற்கவேண்டும்.

★ கொழும்பில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் சேடுதல் நடவடிக்கைகளின் போது வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டால் அவற்றிற்கான பொறுப்பை ஹோட்டல் மற்றும் விடுதிகளின் நிர்வாகமே ஏற்கவேண்டும்.

இந்த எச்சரிக்கை ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட அனைத்து ஹோட்டல்கள், விடுதிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கொழும்பில் கடந்த இரண்டு தினங்களில் கைதான தமிழரின் எண்ணிக்கை, அமைச்சர் குறிப்பிட்டதை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என்று ஏஜென்சித் தகவல்கள் தெரிவித்தன. (உ)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தம்பிராசா

இணுவில் கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பிராசா 11-10-1990 இல் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும்; பேரின்பநாயகம், இராசநாயகம், செல்வநாயகம், சர்வலோகநாயகி, லோசநாயகி (டென்மார்க்), சிவநாயகம் (பிரான்ஸ்), நிஸநாயகம் (பிரான்ஸ்), புஷ்பநாயகி (லண்டன்), தவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும்; இராஜேஸ்வரி, லலிதாம்பிகை, பாலசரஸ்வதி, காலம்சென்ற கந்தசாமி, இராமச்சந்திரன் (டென்மார்க்), சறோஜாதேவி (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), இராசரத்தினம் (லண்டன்), பலராமன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) வெள்ளிக்கிழமை 1-00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

தகவல்:
[13894] வை. பலராமன் (மருமகன்) நாதன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம். தாவடி வீதி 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org